VIRUDHUNAGAR MUNICIPALITY

FORM 3

Minutes of the Meeting held on 06.01.2020

| Date of Council meeting | Decision Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 06.01.2020 | 564 | **பொருள் – 1**<br><br>சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 27061/2015/ யு.பி.ஏ–2, நாள். 01.07.2016– மற்றும் ந.க.எண். 38038/2013/யுபிஏ2, நாள். 30.01.2017ல் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நகராட்சிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் உள்நோயாளிகளின் பாதுகாவலர் மருத்துவ மனையில் தங்குவதற்கு ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 28.11.2016ம் தேதிய மாநில திட்ட குழு கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு நகராட்சிகளின் மண்டல செயற் பொறியாளர்,திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 630/2017/ஆ1, நாள். 04.09.2017ன் படி தொழில்நுட்ப அனுமதி எண். 16/2017–18 பெறப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இப்பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 95 நாள். 28.02.2017ன்படி விருதுநகர்அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் உள்நோயாளிகளின் பாதுகாவலர் மருத்துவமனையில் தங்குவதற்கு அரசு சாரா நிறுவனம் ''பொதிகை டிரஸ்ட் விருதுநகர்'' மூலம் கட்டிட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதியளிக்கப்பட்டு, இந்நிறுவனத்துடன் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தலைமையில் 08.01.2020 அன்று கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**கூட்ட நடவடிக்கைகள்** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 1. | அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் உள்நோயாளிகளின் பாதுகாவலர் மருத்துவ மனையில் தங்குவதற்கு இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. | | |
| | | | 2. | தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அரசு மானியம் பெறப்படும் வரை மேற்படி உறைவிடம் இயங்குவதற்கு தேவையான குடிநீர் மற்றும் மின் கட்டணம் ஆகியவற்றிற்கு நகராட்சியிலிருந்து செலுத்தப்படவேண்டும். அரசு மான்யம் பெறப்பட்ட பின்பு மேற்படி செலவினங்களுக்காக நகராட்சியிலிருந்து செலுத்தப்படும் தொகை நிறுத்தப்பட்டு அந்த தொண்டு நிறுவனம் மான்ய உதவி தொகையிலிருந்து மேற்படி செலவினங்களை மேற்கொள்ளவேண்டும். | | |
| | | | 3. | தொண்டு நிறுவனத்தால் கீழ்கண்ட பதிவேடுகள் பராமரிக்கப்படவேண்டும்.<br><br>1) சொத்து விபர பதிவேடு (அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் விபரம்)<br>2) கணக்கு பதிவேடு ( தினசரி வரவு செலவு கணக்கு பராமரித்தல்)<br>3) வருகை பதிவேடு<br>4) நியமன குழு கலந்தாய்வு கூட்ட பதிவேடு<br>5) தன்பதிவேடு மற்றும் ஊதிய பதிவேடு<br>6) பராமரிப்பு பதிவேடு<br>7) புகார் பதிவேடு<br>8) பார்வையாளர் பதிவேடு | | |
| | | | 4. | தொண்டுநிறுவனம் உறைவிடத்தினை இயக்குவதற்கு கீழ்கண்ட பணியாளர்களை நியமனம் செய்யவேண்டும்.<br><br>1) முழு நேர மேலாளர் – ஒரு நபர் ( பிரதி மாதம் ரூ. 15,000/– ஊதியம்)<br>2) பாதுகாவலர்களின் உதவியாளர்கள் – இரண்டு நபர்கள் (பிரதி மாதம் ரூ. 10,000/– ஊதியம்)<br>3) துப்புரவு பணியாளர்கள் ( தொண்டு நிறுவனத்தின் தேவைக்கேற்ப) (மொத்தமாக மாத செலவினம் ரூ. 15,000/–) | | |
| | | | 5. | தொண்டு நிறுவனத்தினரால் அமர்த்தப்படும் பணியாளர்களுக்கு போதிய பயிற்சி அளித்து திறம்பட பணியாற்ற வைப்பது தொண்டுநிறுவனத்தின் பொறுப்பாகும். | | |
| | | | 6. | நோயாளிகளின் பாதுகாவலர்களுக்கு அவசர உதவி தேவைப்பட்டால் அதுசமயம் பணியில் இருக்கும் உதவியாளர்கள் தொண்டுநிறுவனத்தின் மூலம் அருகில் உள்ள மருத்துவமனைக்கு | | |

| | |
|---|---|
| | செல்ல ஏற்பாடு செய்யவேண்டும். |
| 7. | பிரதி மாதம் 5–ம் தேதிக்குள் தொண்டுநிறுவனம் உறைவிடத்தில் தங்க வரும் நோயாளிகளின் பாதுகாவலர்களின் பட்டியலை நகராட்சிக்கு அளிக்கும்பட்சத்தில் நகராட்சியானது பதிவேடுகளை ஆய்வு செய்து அதற்கான செலவினத்தை வங்கி வரைவோலையாக நிறுவனர் பொதிகை டிரஸ்ட்,1,மதுரை ரோடு, விருதுநகர்என்ற பெயரில் வழங்கவேண்டும். |
| 8. | நோயாளிகளின் பாதுகாவலர்கள் உறைவிடமானது 24 மணிநேரமும் வாரத்தின் 7 நாட்களும் (24x7) பயனாளிகள் வந்துசெல்வதற்கு ஏதுவாக திறந்து வைக்கப்படவேண்டும். |
| 9. | ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக தலா 25 நபர்கள் தங்குவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஏதேனும் மாற்றங்கள் செய்ய விரும்பினால் நகராட்சியின் முன்அனுமதியோடு தொண்டு நிறுவனம் செயல்படவேண்டும். |
| 10. | வணிக நோக்கத்தோடு மேற்படி கட்டிடம் பயன்படுத்தக்கூடாது. ஏதேனும் சூழ்நிலையில் தவறாக பயன்படுத்தப்படுவது கண்டறியப்பட்டால் முன்அறிவிப்பு ஏதுமின்றி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். |
| 11. | தொண்டு நிறுவனமானது நோயாளிகளின் பாதுகாவலர் தவிர பிற நபர்களை பிற நபர்களை தங்குவதற்கு அனுமதிக்ககூடாது. |
| 12. | தொண்டு நோக்கத்தோடு செயல்படவேண்டியிருப்பதால் பயனாளிகளை கட்டாயப்படுத்தி உறைவிடத்தில் தங்கவைக்க கூடாது. |
| 13. | சட்ட விரோதமான செயல்கள் எதுவும் நடைபெற அனுமதிக்கக்கூடாது. ஏதேனும் சட்ட பிரச்சினைகள் ஏற்பட்டால் தொண்டுநிறுவனமே பொறுப்பேற்க வேண்டும். |
| 14. | ஏற்கனவே மன்றத்தில் அனுமதித்துள்ளபடி நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ. 20/– பெற்றுக்கொண்டு தங்க அனுமதிக்கலாம். மேற்கண்ட தொகை ரூ. 20/– யை செலுத்த இயலாத சூழ்நிலையில் உள்ள நோயாளிகளின் பாதுகாவலர்களை இலவசமாக தங்க அனுமதிக்கவேண்டும். அதற்கு தனியாக பதிவேடு பராமரிக்கப்படவேண்டும். |
| 15. | உறைவிடத்தில் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது எந்த வகையிலும் சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு பராமரிக்கும் நிறுவனமே பொறுப்பாகும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 16. | உறைவிட காப்பக மேலாண்மை குழு காப்பகத்தின் நிகழ்வுகளை தினசரி கவனிக்கவேண்டும். மேலும், மேலாண்மை குழு கலந்தாய்வு கூட்டங்கள் மாதத்திற்கு இருமுறை கூட்டப்பட்டு நிகழ்வுகளின் கூட்ட நடவடிக்கைகள் தயார் செய்யப்படவேண்டும். | | |
| | | | 17. | காப்பகத்தின் வரவு செலவினங்களை பராமரிப்பதற்கு தனியான வங்கி கணக்கு ஆணையர் மற்றும் பொதிகை டிரஸ்ட்,1,மதுரை ரோடு, விருதுநகர்ஆகிய இருவரது பெயரிலும் தொண்டு நிறுவனத்தின் கூட்டு கணக்காக துவங்கப்படவேண்டும். இது சம்மந்தமாக ஒவ்வொரு ஆண்டும் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டு நகராட்சிக்கு தெரிவிக்கவேண்டும். | | |
| | | | 18. | நகராட்சி காப்பகத்தின் செயல்பாடுகளை எந்தநேரத்திலும் ஆய்வு செய்யும் உரிமை உண்டு. | | |
| | | | 19. | ஒவ்வொரு காலாண்டிற்கும் நகராட்சி மற்றும் தொண்டுநிறுவனம் இரண்டிற்கும் பணிகள் பற்றிய முன்னேற்ற அறிக்கை கலந்தாய்வு செய்யப்படவேண்டும். | | |
| | | | 20. | ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை தவறும்பட்சத்தில் மூன்று மாத காலத்திற்குள் அறிவிப்பு வழங்கி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். | | |
| | | | 21. | முதலாவது ஆண்டில் தொண்டு நிறுவனத்தின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு திருப்திகரமாக இருக்கும்பட்சத்தில் மட்டுமே தொடர்ந்து புதுப்பித்தல் செய்யப்படும். | | |
| | | | 22. | நிதிநிலைமை காரணமாகவோ, வேறு எந்த சூழ்நிலை காரணமாக மேற்படி காப்பகத்தை தொண்டுநிறுவனம் மூலம் இயக்க முடியாத நிலை ஏற்படுமேயானால் மூன்று மாதத்திற்கு முன்பாகவே நகராட்சிக்கு தெரிவிக்கப்படவேண்டும். நகராட்சி மூலம் புதிய தொண்டு நிறுவனம் நியமனம் செய்யப்படும். | | |
| | | | 23. | இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது 10.01.2020 முதல் 09.01.2021 வரை ஏற்புடையதாகும். ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் தொண்டு நிறுவனத்தின் செயல்பாடுகளை பொறுத்து நீட்டிப்பு செய்யப்படும். அல்லது தொண்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் வழிமுறைகளுக்கு புறம்பானதாக இருப்பின் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும். | | |

| | |
|---|---|
| 24. | நோயாளிகளுடன் உடன் தங்குபவர் உறைவிடத்தில் தங்க வரும்போது அரசு மருத்துவமனை அலுவலகத்திலிருந்து நோயாளியின் பெயர் மற்றும் நோயாளியின் பாதுகாவலரின் பெயர் அடங்கிய முறையான அனுமதி சீட்டினை பெற்று தங்க அனுமதிக்கவேண்டும். |

**அலுவலக்குறிப்பு..**

1) கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கை விபரத்தினை மன்றம் பதிவு செய்யலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி முன்அனுமதி பெற்று விருதுநகர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளின் பாதுகாவலர்கள் மருத்துவமனையில் தங்குமிடம் கட்டப்பட்டுள்ளதை ''பொதிகை டிரஸ்ட்,1, மதுரை ரோடு, விருதுநகர்'' தொண்டு நிறுவனம் மூலம் மேற்பார்வை மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ள உத்திரவு வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

565

**பொருள் – 2**

நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் மின்னஞ்சல் கடிதத்தின்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் மேம்படுத்துதல் பணிகளுக்கு பதினான்காவது மத்திய நிதிக்குழு நிதித்திட்டம் **2019–20**ம் ஆண்டிற்கு மொத்தம் ரூ**424.61** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் முதல் தவணையாக ரூ**212.31** இலட்சத்திற்கு கீழ்க்கண்டுள்ளவாறு

| Sl.No. | Name of work | Length (K.M) | Estimate Amount (Lakh) |
|---|---|---|---|
| Package-1 | Providing B.T.Surface with CMP at West car street (ward nos.19,21) | 0.420 | 50.00 |
| | Providing Paver Block Pavement at Balaji nagar and cross streets in ward no.2 | 0.341 | |
| | Providing B.T.Surface with CMP at Mathanayakkan patti road (ward no.32) and Vetnery Hospital | | |

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| Package-2 | road(ward no.36) | 0.715 | 50.00 |
| Package-3 | Providing B.T.Surface with CMP at By pass link road near New bus stand (ward no.26)and Ganesh nagar(ward no.4). | 0.710 | 46.00 |
| Package-4 | Providing B.T.Surface with CMP at Balaji nagar main road , cross streets (ward no.2)and Dhayalan Rajesh colony (ward no.35) | 0.655 | 50.00 |
| | Providing Paver Block Pavement at Soundamman koil street (ward no.34) , Sankaranarayanapuram street (wardno.36) and Kasappukara street (ward no.28) | 0.445 | |
| Package-5 | Providing B.T.Surface with CMP at Velusamy nagar (ward no.4) | 0.14 | 35.00 |
| | Providing Paver Block Pavement at Neruji nagar I street (ward no.4) and VMC colony (wardno.1) | 0.55 | |
| | **Total** | **3.976** | **231.00** |

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு– மேற்கண்ட பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை காட்டிலும் கூடுதலாக செலவாகும் செலவினத்தை பொது நிதியில் இருந்து செலவு செய்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.7833–1/2019/இ1

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 566 | **பொருள் – 3**<br>விருதுநகர் புதிய பேருந்து நிலையம் அமைக்க இடம் கொடுத்துள்ளவர்களுக்கு நில பரிவர்த்தனை மூலம் வழங்குவது தொடர்பான பிரேரணையினை விருதுநகர் நகராட்சியில் இருந்து மன்ற தீர்மான எண்.49, நாள்.27.02.2001-ல் இயற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டது. இது தொடர்பாக மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் 21.11.2013-ம் தேதிய கடிதத்தில் புல எண் 559/2, 559/3-ல் உள்ள இடத்திற்கான நிலமதிப்பு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.17,60,260/- ஒரு சதுரடிக்கு ரூ.40.41 வீதம் சதுர மீட்டருக்கு ரூ.437/- எனவும் புல எண் 524/1பி மற்றும் 524/3-ல் உள்ள நிலத்திற்கு ரூ.57.41 வீதம் சதுர மீட்டருக்கு ரூ.25,01,012 வீதம் 617.75 என நில நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நிலம் வழங்கியவர்களின் நில மதிப்பை விட நகராட்சி நில மதிப்பு அதிகம் உள்ளதால் இது தொடர்பான மன்ற தீர்மானம் கேட்டு ந.க.எண்.46666/2011/டிபி2, நாள்.18.12.2019 தேதிய கடிதத்தில் வரப்பெற்றுள்ளது.<br>வழக்கு எண்.WP(MD) No.14344/2010 என்ற வழக்கு நிலுவையில் உள்ளதாலும் 27.02.2001 தேதிய இதே நகர்மன்றத்தின் தீர்மான எண்.49-ல் அன்றைய வழிகாட்டி மதிப்பு நகராட்சி பழைய கம்போஸ்ட் நிலத்தின் மதிப்பு சதுரஅடி 1க்கு ரூ.4/-ஆகவும் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தின் வழிகாட்டி மதிப்பு சதுரஅடி 1க்கு ரூ.8.60 ஆகவும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய பதிவுத்துறை வழிகாட்டி மதிப்பீட்டினை ஆராயும் போது 559/2, 559/3 என்ற சர்வே இடங்களில் சதுரடி ஒன்றுக்கு ரூ.121/- என்ற அளவில் மதிப்பு காட்டப்பட்டுள்ளது. அதன்படி புதிய பேருந்து நிலையம் அமைக்க பெறப்பட்ட நிலத்தின் மதிப்பு ஒரு ஏக்கருக்கு ரூ.52,70,760/- என்ற விலை விகிதத்திலும் அதற்கு மாற்றாக நகராட்சி வழங்கக்கூடிய மாற்று இடமான 524/1B, 524/3, சர்வே இடங்களில் அரசு மதிப்பு ஏக்கருக்கு ரூ.16,75,000/- என்ற விலை விகிதத்திலும் உள்ளது. இவ்வாறு எந்த விகையில் நோக்கினாலும் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் வர வாய்ப்பில்லை. எனவே இடத்திற்கு இடம் என்ற அளவில் நிலம் பரிவர்த்தனை செய்ய அரசின் அனுமதி பெற்று வழங்கலாம். நிலம் வழங்கிய மனிதர்களின் நல்லெண்ண அடிப்படையில் அன்றைய தேதியில் கூடுதல் மதிப்பு இருந்தும் நகராட்சி எடுத்த நில அளவிற்கே நில பரிவர்த்தனை கேட்ட அவர்களின் நல்ல எண்ணத்தையும் இந்த நகராட்சிக்கு கருத்தில் கொண்டு நிலத்திற்கு நிலம் என்ற அளவில் நில பரிவர்த்தனை செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | ந.க.எண். 973/2012/எப்1. | |
| | 567 | **பொருள் – 4**<br>**விருதுநகர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் சாலையோர வியாபாரிகள் மொத்தம் 443 பேர் உள்ளனர். மேற்படி சாலையோர வியாபாரிகளுக்கான விற்பனை செய்யும் இடம் மற்றும் விற்பனை செய்ய தடை செய்யப்பட்ட இடம் என இரு இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சாலையோர வியாபாரிகளுக்கான** DIP Report **மற்றும்** Power Point (PPT) **- யினை ஸ்ரீ மாங்காடு காமாட்சியம்மன் பிசினஸ் கார்ப்பரேசன் - சென்னை அவர்களின்** Info maps **என்ற நிறுவனம் மூலம் தயார் செய்யப்பட்டது. எனவே** DIP Report **மற்றும்** Power Point (PPT) **ஐ தயார் செய்ததற்கான செலவுத்தொகை ரூ.20,000/- ஐ ஸ்ரீ மாங்காடு காமாட்சியம்மன் பிசினஸ் கார்ப்பரேசன் சென்னை அவர்களின் நிறுவனத்திற்கு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>**அலுவலகக்குறிப்பு :** **மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**ந.க.எண்.**7517/2015/எச்1 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 568 | **பொருள் – 5**<br>இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள இராவ்பகதுூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளி வளாகத்தின் முகப்பு பகுதிகளில் பேவர்கல் தளம் பதித்து உயர்த்தி அமைக்கும் பணியினை கல்வி நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்ள ரூ.**6.30** இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு **– 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.**7318–3/19/**இ**1.** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |